1983 சனவரி 28]

விரைவாக எழுப்புவதற்குத் துணையாக விசேஷ அனுமதியை அரசே முனைந்து செய்து முயற்சி எடுக்குமா? அமைச்சர் அவர்களின் பரிசீலிக்கப்படும் என்ற பதிலை நான் எதிர்பார்க்க வில்லை. முனைந்து அரசு முயற்சி எடுக்குமா என்பதை நான் எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 15 மீட்டர்களுக்கு மேலே உயரமாகக் கட்டுவதற்குத் தான் இந்தத் தடை என்று நான்சொன்னது. நீங்கள் திடீரென்று அனுமதியே பெறாமல் பெரியவர் காமராஜர் அவர்கள் நினைவாலயத்தைக் கட்டினால், அதனால் உங்களுக்கு கெட்ட பெயர் வரக்கூடாது. அதை மனதிலே வைத்துத்தான், சிறப்பாக எல்லோரும் போய்ப் பார்த்து மரியாதை செலுத்தும் இடமாக இருக்கின்ற காரணத்தினால், தனியாக நீங்கள் as a special case, pending finalisation of the scheme and other things by the Government. அப்படிப்பட்ட ஒரு மனு கொடுக்கப்படுமானால் உண்மையாகவே அது சீரியசாக பரிசீலனை செய்யப்படும்.

நிதிவசதி குறைவான நகரபஞ்சாயத்துக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க திட்டம்.

*வினா எண் 32— திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நிதிவசதி குறைவான நகர பஞ்சாயத்துக்களின் குடிநீர் பிரச்சினையைப் போக்க அரசிடம் மாற்றுத் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: ஆம்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சில நகர பஞ்சாயத்துக்களில் ஏராளமான கிராமங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதால், அந்தக் கிராமங்களுக்கு பக்கத்தில் இருக்கின்ற இடங்களல் இதுவரையில் தண்ணீர் கொடுப்பதற்கு குடிநீர் வடிகால் வாரியம் முன்வரவில்லை. ஆக, இந்த ஆண்டு தண்ணீர் கிடைக்காத நகர பஞ்சாயத்து கிராம மக்களுக்கு உடனடியாக தண்ணீர் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே கேள்வி அதுவல்ல. நிதிவசதி குறைவாக இருக்கக்கூடிய நகர பஞ்சாயத்துக்களில் குடிநீர் பிரச்சனையைப் போக்க அரசிடம் மாற்றுத் திட்டம் இருக்கிறதா என்று கேட்டுவிட்டு, அடுத்த கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இருந்தாலும் ஒரு தகவல் தருகிறேன்.

அப்படிப்பட்ட நகர பஞ்சாயத்துக்களுக்கு அரசு 50 சதவீதம் மானியமாகத் தர முடிவெடுத்திருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிவசதி குறைவாக இருக்கிற நகர பஞ்சாயத்துக்களில், நெல்லை மாவட்டத்தில் நான்குனேரி தொகுதியில் 4 நகரப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அதற்கு இதுவரை நிதிநிலை சரி இல்லை என்று சொல்கிறபடியால், குடிநீர் வடிகால் வாரியத்திலிருந்து உடனடியாக வசதி செய்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசின் கொள்கையைச் சொல்லிவிட்டேன். அந்த நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வது மாண்புமிகு உறுப்பினர்களுடைய திறமையாகும்.

திருவண்ணாமலையில் குடிநீர் பற்றாக்குறையைப் போக்க திட்டம்.

*வினா எண் 33—திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலையில் குடிதண்ணீர் பற்றாக்குறையைப் போக்கி நிரந்தர குடிதண்ணீர் கிடைக்க அரசிடம் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை நகராட்சியில் குடிநீர் விநியோகத்தை அதிகரிக்க ரூ. 7.192 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

இந்நகராட்சிக்கு நிரந்தரமாக குடிநீர் வழங்கும் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஆய்வில் உள்ளது.

திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆய்வுகள் எப்போது முடியும்? இந்த வேலை எப்போது முடிப்பதற்கு அரசு முன்வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 5 ஆழ்துளைக் கிணறுகள் சமுத்திரம் குகைப்படுகையில் போட ரூ. 2.692 இலட்சம் ரூபாயும், பொன்னியார் திட்டத்தின் மூலம் வழங்கும் குடிநீரை